# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசர கூட்டம் 2020–ம் வருடம் ஜனவரி மாதம் 06.01.2020 –ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

## பொருட்கள்

1) பத்மனாபபுரம் நகராட்சியில் 14–வது நிதிக்குழு மானியம் 2019–2020–ன் கீழ் ரூ. 66.85 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் பகுதிகளில் சாலை பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| Sl.No. | Name of the work | Estimate Amount (Rs.in Lakhs) |
|---|---|---|
| 1. | Providing BT Surface at Kumaracoil Car street roads and Manali Junction to Moolachel road in Padmmanabhapuram Municipality. | 47.60 |
| 2. | Providing BT surface at K.K. Karai street in Padmanabhapuram Municipality | 19.25 |
| | Total | 66.85 |

மேற்கண்ட திட்டத்தின் கீழ் மேற்காணும் பணிகளை செய்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**மன்றத் தீர்மானம் எண்.1582, நாள்.06.01.2020.**

**அனுமதி வழங்கப்படுகிறது.**

2)பத்மனாபபுரம் நகராட்சியில் 14–வது நிதிக்குழு மானியம் 2019–2020–ன் கீழ் ரூ. 19.25 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்காணும் பகுதிகளில் சாலை பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| Sl.No. | Name of the work | Estimate Amount (Rs.in Lakhs) |
|---|---|---|
| 1. | Providing BT surface at K.K. Karai street in Padmanabhapuram Municipality | 19.25 |

மேற்கண்ட திட்டத்தின் கீழ் மேற்காணும் பணியினை செய்ய நிர்வாக அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**மன்றத் தீர்மானம் எண்.1583, நாள்.06.01.2020.**

**அனுமதி வழங்கப்படுகிறது.**

3)தமிழக அரசின் ஆணைப்படி பத்மனாபபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் பத்மனாபபுரம் குடிநீர் அபிவிருத்தி திட்டம் செயலாக்கத்திற்கு அரசாணை (MS) எண். 174, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 24/11/2015 ன் படி ரூ. 1487.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பத்மனாபபுரம் நகராட்சிக்கான குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை செயலாக்க உத்திரவு வழங்கப்பட்டது.

பத்மனாபபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ் பத்மனாபபுரம் குடிநீர் அபிவிருத்தி திட்ட செயலாக்கத்திற்கு முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உரிய விதிகள் பின்பற்றி தலைமை பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் , மதுரை அவகளின் பணி ஆணை கடிதம் எண். F. Eraniel WSIS/SDO/II/CW/2018/ நாள் 09/5/2018-ன் படி M/S. Koya Company Construction ltd., Hyderabad நிறுவனத்திற்கு 09/05/2018 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் Project Division Nagercoil அவர்களின் கடிதம் எண். 01-2020-ன் படி மேற்கண்ட திட்ட செயலாக்கத்திற்கு ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் கூடுதல் மத்திய மாநில சேவை வரி, தேசிய நெடுஞ்சாலை, ரயில்வே துறைகளுக்கான சாலை சீரமைப்புக் கட்டணம் மற்றும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ஆகியவற்றின் காரணமாக ரூ. 866.80 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட குடிநீர் அபிவிருத்தி பணிகளை முழுமையாக முடிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கூடுதலாக ரூ.866.80 இலட்சம் வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி கூடுதல் செலவினம் ரூ.866.00 இலட்சம் நிதியை ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சிதிட்டத் (IUDM) 2020- 2021 ன் கீழ் ஒதுக்கீடு பெறவும் மற்றும் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.1487.00 இலட்சத்திலிருந்து ரூ 2353.80 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி வழங்க வேண்டியும் , நகராட்சி நில்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது

**கோப்பு எண்.1200/2017/இ1.**

<u>**மன்றத் தீர்மானம் எண்.1584, நாள்.06.01.2020.**</u>

<u>**அனுமதி வழங்கப்படுகிறது.**</u>

ஆணையாளர்(பொ),
பத்மனாபபுரம் நகராட்சி.